## செப்டம்பர் - 08 - வெள்ளி
## அன்னை மரியாவின் பிறப்பு

**இதோ கன்னி கருவுற்று ஆண்மகவைப் பெற்றெடுப்பார்'' (மத்.1:23)**

### முதல் வாசகம் : மீக்கா 5 : 1 – 5

அரண்சூழ் நகரில் வாழும் மக்களே! உங்கள் மதில்களுக்குப் பின்னால் ஒளிந்து கொள்ளுங்கள் உங்களுக்கு எதிராக முற்றுகையிடப்பட்டுள்ளது இஸ்ரயேலின் ஆளுநன் கோலால் கன்னத்தில் அடி பெறுவான். நீயோ, எப்ராத்தா எனப்படும் பெத்லகேமே! யூதாவின் குடும்பங்களுள் மிகச் சிறியதாய் இருக்கின்றாய்! ஆயினும், இஸ்ரயேலை என் சார்பாக ஆளப் போகின்றவர் உன்னிடமிருந்தே தோன்றுவார் அவர் தோன்றும் வழி மரபோ ஊழி ஊழிக் காலமாய் உள்ளதாகும். ஆதலால், பேறுகால வேதனையில் இருப்பவள் பிள்ளை பெறும்வரை அவர் அவர்களைக் கைவிட்டு விடுவார் அதன் பின்னர் அவருடைய இனத்தாருள் எஞ்சியிருப்போர் இஸ்ரயேல் மக்களிடம் திரும்பி வருவார்கள். அவர் வரும்போது, ஆண்டவரின் வலிமையோடும் தம் கடவுளாகிய ஆண்டவரது பெயரின் மாட்சியோடும் விளங்கித் தம் மந்தையை மேய்ப்பார் அவர்களும் அச்சமின்றி வாழ்வார்கள் ஏனெனில், உலகின் இறுதி எல்லைகள்வரை அப்போது அவர் மேன்மை பொருந்தியவராய் விளங்குவார் அவரே அமைதியை அருள்வார். அசீரியர் நம் நாட்டிற்குள் படையெடுத்து வரும்போதும், நம் அரண்களை அழித்தொழிக்கும் போதும் அவர்களுக்கு எதிராக மேய்ப்பர் எழுவரையும் மக்கள் தலைவர் எண்மரையும் நாம் கிளர்ந்தெழச் செய்வோம்.

**பதில்பாடல் :** ஆண்டவரில் நான் பெருமகிழ்ச்சி அடைவேன்

### நற்செய்தி : மத்தேயு 1 : 1 – 16, 18 – 23

தாவீதின் மகனும் ஆபிரகாமின் மகனுமான இயேசு கிறிஸ்துவின் மூதாதையர் பட்டியல்: ஆபிரகாமின் மகன் ஈசாக்கு ஈசாக்கின் மகன் யாக்கோப்பு யாக்கோபின் புதல்வர்கள் யூதாவும் அவர் சகோதரர்களும்.யூதாவுக்கும் தாமாருக்கும் பிறந்த புதல்வர்கள் பெரேட்சும் செராகும் பெரேட்சின் மகன் எட்சரோன் எட்சரோனின் மகன் இராம். இராமின் மகன் அம்மினதாபு. அம்மினதாபின் மகன் நகசோன் நகசோனின் மகன் சல்மோன்.சல்மோனுக்கும் இராகாபுக்கும் பிறந்த மகன் போவாசு் போவாசுக்கும்ரூப அித்துக்கும் பிறந்த மகன் ஓபேது. ஓபெதின் மகன் ஈசாய்.ஈசாயின் மகன் தாவீது அரசர் தாவீதுக்கு உரியாவின் மனைவியிடம் பிறந்த மகன் சாலமோன்.சாலமோனின் மகன் ரெகபயாம் ரெகபயாமின் மகன் அபியாம் அபியாமின் மகன் ஆசா.ஆசாவின் மகன் யோசபாத்து யோசபாத்தின் மகன் யோராம் யோராமின் மகன் உசியா.உசியாவின் மகன் யோத்தாம் யோத்தாமின் மகன் ஆகாசு் ஆகாசின் மகன் எசேக்கியா. எசேக்கியாவின் மகன் மனாசே. மனாசேயின் மகன் ஆமொன் ஆமொனின் மகன் யோசியா.யோசியாவின் புதல்வர்கள் எக்கோனியாவும் அவர் சகோதரர்களும். இவர்கள் காலத்தில்தான் யூதர்கள் பாபிலோனுக்குச் சிறைப்பிடித்துச் செல்லப்பட்டார்கள். பாபிலோனுக்குச் சிறைப்பிடித்துச் செல்லப்பட்ட பின்பு எக்கோனியாவுக்குப் பிறந்த மகன் செயல்தியேல் செயல்தியேலின் மகன் செருபாபேல். செருபாபேலின் மகன் அபியூது அபியூதின் மகன் எலியாக்கிம் எலியாக்கிமின் மகன் அசோர்.அசோரின் மகன் சாதோக்கு சாதோக்கின் மகன் ஆக்கிம் ஆக்கிமின் மகன் எலியூது.எலியூதின் மகன் எலயாசர் எலயாசரின் மகன் மாத்தான் மாத்தானின் மகன் யாக்கோபு.யாக்கோபின் மகன் மரியாவின் கணவர் யோசேப்பு. மரியாவிடம் பிறந்தவரே கிறிஸ்து என்னும் இயேசு கிறிஸ்துவின் பிறப்பையொட்டிய நிகழ்ச்சிகள் அவருடைய தாய் மரியாவுக்கும் யோசேப்புக்கும் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அவர்கள் கூடி வாழும் முன் மரியா கருவுற்றிருந்தது தெரிய வந்தது. அவர் தூய ஆவியால் கருவுற்று இருந்தார்.அவர் கணவர் யோசேப்பு நேர்மையாளர். அவர் மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பாமல் மறைவாக விலக்கிவிடத் திட்டமிட்டார்.அவர் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கும்போது ஆண்டவரின் தூதர் அவருக்குக் கனவில் தோன்றி, ''யோசேப்பே, தாவீதின் மகனே, உம்மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான்.அவர் ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்'' என்றார்.“இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்“ என்று இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் உரைத்தது நிறைவேறவே இவை யாவும் நிகழ்ந்தன. இம்மானுவேல் என்றால் கடவுள் நம்முடன் இருக்கிறார் என்பது பொருள்..

**தியானம்:** இதோ என் தாய் என்று இயேசுவால் நம் அனைவருக்கும் அருளப்பட்ட அன்னை மரியாளின் பிறப்பு விழாவை நினைவு கூர்ந்து இன்று கொண்டாட தாய்த்திருச்சபை நம்மை அழைத்து நிற்கின்றது, இன்றைய இரண்டு வாசகங்களும் இயேசுவின் பிறப்பைக் குறித்து முன்னறிவிப்பையும் இறைமகன் இயேசு தோன்றிய மூதாதையர் பட்டியலையும் எமக்குத் தருகின்றது. மீக்கா நூலிலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகத்தில் எப்ராத்தா என்னும் பெத்தலகேமே யூதாவின் குடும்பங்களுள் மிகச் சிறந்ததாய் இருக்கின்றாய் ஆயினும் இஸ்ராயேல் என் சார்பாக ஆளப் போகின்றார். உன்னிடமிருந்தே தோன்றினார்'' என்ற இறைவார்த்தையானது கடவுள் சிறியோரை, வறியோரை உயர்த்துவார் என்பதற்கு சான்றாக உள்ளது “இதோ உமது அடிமை'' தன்னைத் தாழ்த்திய மரியாவை கடவுள் உயர்த்தினார். இன்று எம் அனைவரது அன்புத் தாயாக உயர்ந்து நிற்கின்றார். ஆகவேதான் அன்பிற்கு இலக்கணமாக அந்த அன்னையை “அருள் நிறைந்தவளே வாழ்க'' என வாழ்த்துவோம். அந்த அன்னையின் பணிவும், மகிழ்ச்சியும், எம்மில் வளர அனுதினமும் ஜெபிப்போம்!